செ.வெ.எண்: 660 நாள்: 12.11.2020

# மக்காச்சோளப்பயிரில் படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த விவசாயிகள் ஒருகிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

மக்காச்சோளப்பயிரில் படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த விவசாயிகள் ஒருகிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை பின்பற்ற வேண்டும்.இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் 5000 எக்டரில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இறவை மற்றும் மானாவாரி பயிராக சாகுபடி செய்யப்படும் மக்காச்சோளப்பயிரானது, குறைந்த நாளில் அதிக இலாபம் தரும் என்பதால், விவசாயிகள் இப்பயிரை விரும்பி சாகுபடி செய்து வருகின்றனர். நடப்பு வருடத்தில் இதுவரை 1,853 எக்டர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது விதைப்பு முதல் 15-45 நாட்கள் பயிராக உள்ளது.

மக்காச்சோளப்பயிரினை அமெரிக்கன் படைப்புழு முதன்முதலாக கடந்த 2018 ஆம் ஆண்டு தாக்கி மக்காச்சோளப்பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. அமெரிக்கன் படைப்புழு 30 நாட்கள் வாழ்க்கை சுழற்சியினை கொண்டது. தாய் அந்துப்பூச்சி 400-500 கிலோ மீட்டர் தூரம் பறந்து சென்று 1,500 முதல் 2,000 முட்டை வரை இட்டு வேகமாக தனது இனத்தை பெருக்கும் திறன் கொண்டது.

இதனால் குறுகிய காலத்தில் அதிகமாக பரவி தாக்குதலை ஏற்படுத்தும். எனவே, அமெரிக்கன் படைப்புழுவினை ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். 2019ஆம் ஆண்டில் கோடை உழவு, வேப்பம் புண்ணாக்கு இடுதல், விதை நேர்த்தி, வரப்பு மற்றும் ஊடுபயிர் சாகுபடி இனக்கவர்ச்சி பொறிகள் போன்ற பல்வேறு ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகள் ஆகிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விவசாயிகள் கடைபிடித்திட வேளாண்துறை மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக படைப்புழுவின் தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு அதிக மகசூல் கிடைத்தது.

நடப்பு பருவத்தில் பயிரிடப்பட்டுள்ள மக்காச்சோளப்பயிரிலும் படைப்புழுவின் தாக்குதல் ஆங்காங்கே தென்படுகிறது. கடந்த ஆண்டைப் போலவே விவசாயிகள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாண்டு படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்திட புதுக்கோட்டை மாவட்டத்தில் பூச்சி மருந்து விற்பனையாளர்களுக்கு பயிற்சி, விவசாயிகளுக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு பணிகளை தொடர்ந்து வேளாண்துறை மேற்கொண்டு வருகிறது.

விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்யும் மக்காச்சோளப் பயிரில் படைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த விதைப்புக்கு முன் ஆழமாக உழவு செய்து கடைசி உழவில் ஒரு எக்டருக்கு 250 கிலோ வேப்பம் புண்ணாக்கு இட வேண்டும். விதைப்பின்போது விதை நேர்த்தி செய்ய ஒரு கிலோ மக்காச்சோள விதைப்பு 10 கிராம் நுண்ணுயிர் பூச்சிக்கொல்லியான பவேரியா பேசியானா (அல்லது) 10 கிராம் தயோமீதாக்சம் 30 சதம் எப்.எஸ் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

இதன் மூலம் புழுக்கள் அதன் இளம் பருவத்திலேயே கட்டுப்படுத்தப்பட்டு தாக்குதல் 15-20 நாட்கள் வரை பரவுதலை தடுக்க இயலும். ஒரே சமயத்தில் அனைத்து விவசாயிகளும் விதைத்தல் வேண்டும். இறவை பயிருக்கு 60 சென்டி மீட்டருக்கு 25 சென்டி மீட்டர் என்ற இடைவெளியும், மானாவாரி பயிருக்கு 45 சென்டி மீட்டருக்கு 20 சென்டி மீட்டர் என்ற இடைவெளியும் பராமரித்தல் மற்றும் 10 வரிசைக்கு ஒரு வரிசை 75 சென்டி மீட்டர் இடைவெளி விட்டு விதைக்க வேண்டும்.

விதைப்பிற்கு பின் படைப்புழுவினை கண்காணிக்க எக்டருக்கு சூரிய விளக்குப்பொறி ஒன்றும், 12 இனக்கவர்ச்சிப் பொறிகளும் வைத்து படைப்புழுவின் தாய் அந்துப்பூச்சி நடமாட்டத்தை கண்காணிக்க வேண்டும். நன்மை செய்யும் பூச்சிகளை பெருக்குதல் மக்காச்சோள பயிரில் தட்டைப்பயறு, சூரியகாந்தி, எள், சோளம் மற்றும் சாமந்தி பயிர்களை வரப்புப் பயிராகவும், உளுந்து, பாசிப்பயறு ஊடு பயிராகவும் பயிரிட்டு நன்மை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க செய்தல் வேண்டும்.

படைப்புழுவை கட்டுப்படுத்த மக்காச்சோள பயிரில் இலைகளின் அடிப்பாகத்தில் ஆங்காங்கே காணப்படும் படைப்புழுவின் முட்டைக் குவியல்கள் மற்றும் இளம் புழுக்களை சேகரித்து அழிக்க வேண்டும். மணலுடன் சுண்ணாம்பு தூள் 9:1 என்ற விகிதத்தில் கலந்து குருத்துகளில் இட வேண்டும். படைப்புழு தாக்குதல் அதிகம் காணப்பட்டால் விதைப்பு முதல் பூப்பருவம் வரை படைப்புழு

தாக்குதல் 5 சத அளவு இருந்தால் 5% வேப்பங்கொட்டை கரைசல் (அல்லது) அசாடிராக்டின் 1500 பிபிஎம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 மிலி (அல்லது) அசாடிராக்டின் 1% ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி என்ற விகிதத்தில் தெளிக்க வேண்டும்.

படைப்புழு தாக்குதல் 5 முதல் 10 சத அளவு இருந்தால் பேசில்லஸ் துரின்ஜியென்சிஸ் - குர்ஷ்டகி ஏக்கருக்கு 400 கிராம் (அல்லது) ஏக்கருக்கு 1 கிலோ வீதம் மெட்டார்ஹிசியம் அனிசோபிலே (அல்லது) ஏக்கருக்கு 1 கிலோ வீதம் பவேரியாபாசியானா தெளிக்க வேண்டும்.

படைப்புழு தாக்குதல் 10 சதத்திற்கு மேல் காணப்பட்டால் குளோரான்டிரினிபுரோல் 18.5% SC ஒரு ஏக்கருக்கு 80 மிலி என்ற அளவில் 1 லிட்டர் தண்ணீருக்கு 0.4 மிலி என்ற விகிதத்திலும், ஸ்பைனிடோரம் 11.7% SC – 1 லிட்டர் தண்ணீருக்கு 0.5 மிலி என்ற விகிதத்திலும், எமாமெக்டின் பென்ஸயேட் 5% SG ஒரு ஏக்கருக்கு 80 கிராம் என்ற அளவில் 1 லிட்டர் தண்ணீருக்கு 0.4 மிலி என்ற விகிதத்திலும் இரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளில் ஏதேனும் ஒன்று தெளிக்க வேண்டும்.

பூப்பருவம் முதல் அறுவடை வரை பருவத்தில் இரசாயன பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்த வேண்டாம். படைப்புழு 10 சதம் தாக்குதலுக்கு மேல் இருந்தால் பேசில்லஸ் துரின்ஜியென்சிஸ் - குர்ஷ்டகி ஏக்கருக்கு 400 கிராம் (அல்லது) ஏக்கருக்கு 1 கிலோ வீதம் மெட்டார்ஹிசியம் அனிசோபிலே (அல்லது) ஏக்கருக்கு 1 கிலோ வீதம் பவேரியாபாசியானா தெளிக்க வேண்டும்.

வேளாண்மைத்துறை பரிந்துரைக்காத இரசாயன பூச்சி மருந்துகளை கண்டிப்பாக விவசாயிகள் பயன்படுத்தக் கூடாது. விவசாயிகளுக்கு தேவையான பவேரியா மற்றும் மெட்டாரைசியம் போன்ற உயிரி பூச்சிக் கொல்லிகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழக அரசு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் படைப்புழு மேலாண்மைக்காக நடப்பு நிதி ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ரூபாய் 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்படி மக்காச்சோள சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் எக்டருக்கு ரூ.2,000 வீதம், பவேரியா பேசியானா கொண்டு விதை நேர்த்தி செய்தல், நன்மை கிடைக்கும்.

பூச்சிகளின் எண்ணிக்கையை அதிகரித்திட வரப்புப்பயிராக தட்டைப்பயறு, சூரியகாந்தி, எள், சோளம் மற்றும் சாமந்தி பயிர்களை பயிரிடவும், உளுந்து, பாசிப்பயறு ஊடு பயிராகவும் பயிரிட வேண்டும். படைப்புழு தாக்குதல் ஏற்பட்டால் இளம்பருவத்தில் 15 முதல் 20 நாட்களில் வேம்பு சார்ந்த பூச்சிக்கொல்லிகளை தெளித்திடவும், 45 முதல் 50 நாட்களில் பரிந்துரைக்கப்பட்ட இரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளித்து படைப்புழுக்களை கட்டுப்பாடு செய்ய வேண்டும்.

இத்திட்டத்தில் பயன்பெற விவசாயிகள் தங்கள் பகுதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநரை அணுகி பதிவு செய்து கொள்ள வேண்டும். கணினி சிட்டா, மக்காச்சோள பயிர் சாகுபடி மேற்கொண்டமைக்கு தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரின் பரிந்துரையுடன், படைப்புழு மேலாண்மைக்காக வாங்கிய பயிர் பாதுகாப்பு மருந்து பட்டியல்கள், பயிர் பாதுகாப்பு செய்தமைக்கான புகைப்படங்களின் நகல்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு 50 சத மானிய தொகையாக எக்டருக்கு ரூ.2,000 பின்னேற்பு மானியமாக அவர்களது வங்கிக் கணக்கில் வழங்கப்படும். இந்த மானியத் தொகை ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக இரண்டு எக்டர் மக்காச்சோள சாகுபடிக்கு வழங்கப்படும்.எனவே, மேற்கண்ட பயிர்பாதுகாப்பு வழிமுறைகளை முறையாக பின்பற்றி நடப்பாண்டிலும் படைப்புழு தாக்குதலை முழுமையாக கட்டுப்படுத்தி, நல்ல விளைச்சல் பெற்றிடலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**